# எங்கள் நாட்டுக்காக தேவதாயாருக்கு செபம்



பேரன்பும் தயாபரமும் நிறைந்த தாயே,
எமது நாட்டின் இராக்கினியும் பாதுகாவலுமானவரே,
உமது பிள்ளைகளாகிய எங்களை,
எமது இன்னல்கள் நிறைந்த இவ்வேளையில்
கருணைக் கண்கொண்டு நோக்கியருள வேண்டுமென்று
இரந்து மன்றாடுகிறோம்.

நேசத்தாயே, யுத்த அபாயங்களிலிருந்தும் அழிவுகளிலிருந்தும்
எம்மைக் காப்பாற்றத் தக்க தருணங்களில்
எமக்கு பாதுகாவலாக வந்துள்ளீர்.

என்றுமே தோல்வியே காணாத உம்முடைய அன்பைப் பார்த்து,
சகலவிதமான வன்செயல்களிலிருந்தும், பகைமைகளிலிருந்தும்
எம்மைக் காப்பாற்றியருள வேண்டுமென்று
இரந்து மன்றாடுகிறோம்.

எமது நாட்டின் நீதியினதும் அன்பினதும்
இராட்சியத்தைக் கட்டியெழுப்ப அருள் புரிந்தருளும்.

அன்பான தாயே, உமது தாய்க்குரிய அன்பையும்,
கரிசனையும் நன்றாக அறிந்து கொண்ட நாம்
எமது நாட்டிலுள்ள சகல மக்களையும் உமது அன்பான தாபரிப்பிலும்
வழிநடத்துதலிலும் ஒப்படைக்கிறோம்.
எங்கள் மத்தியில் சகோதரத்துவத்தையும்,
சமாதானத்தையும், ஒற்றுமையும் உருவாக்க எமக்கு உதவி புரிந்தருளும்.

நாமனைவரும் ஒரே குடும்பத்தின் பிள்ளைகளாக வாழ
எங்கள் மத்தியில் நிலையான சமாதானத்தைப் பெற்றுத் தந்தருளும்,

ஆமேன்.